பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**20 06 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் கொல்கத்தாவில் யோகாசன நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.
2. மத்திய அரசு கடந்த **12** ஆண்டுகளில் வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
3. தேர்தல் நடவடிக்கைகளை மேம்படுத்த உறுதிபூண்டிருப்பதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** கூறியுள்ளார்.
4. தென்கொரியா உடனான உறவுகளை மேம்படுத்த இந்தியா ஆவலுடன் இருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டுள்ளார்.
5. உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Meenakshi Hooda** மற்றும் **Prachi** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் கொல்கத்தாவில் யோகாசன நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

உலகம் முழுவதும் 2 ஆயிரத்து 500 இடங்களில் யோகாசன நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக மத்திய ஆயுஷ் அமைச்சகம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் காலத்தால் அழியாத யோகா பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில், யோகாசன நிகழ்வில் மக்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்று அந்த அமைச்சகம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழகத்தின் மகாபலிபுரம், தில்லியின் செங்கோட்டை, உத்தராகண்டின் ஹரித்துவார், கர்நாடகாவின் ஹம்பி, மகாராஷ்ட்ராவின் மும்பை, பீகாரின் நாலந்தா, உத்தரப்பிரதேசத்தின் சார்னாத், குஜராத்தின் அகமதாபாத், தெலங்கானாவின் ஹைதராபாத் உள்ளிட்ட 12 முக்கிய இடங்களில் யோகாசன நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி கொல்கத்தாவில் நாளை நடைபெறும் நிகழ்ச்சியில், மூன்று இந்திய கடற்படை போர் கப்பல்களை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

இந்திய கடற்படையின் போர் கப்பல் வடிவமைப்பு வாரியம் அமைத்துள்ள இந்த போர் கப்பல் கொல்கத்தாவின் காடர்ன் ரீச் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

**I N S Dunagiri** போர் கப்பலில் பிரம்மோஸ் ஏவுகணை உள்ளிட்ட ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன.

**I N S Sanshodak** கப்பல் கடலோர மற்றும் ஆழ்கடல் பகுதிகளில் ஆய்வுக்கு பயன்படுத்தப்படும்.

**I N S Agray** போர் கப்பல் நீர்மூழ்கி கப்பலை கண்டறிந்து அழிக்கும் திறன் கொண்டதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பல்களின் **75** சதவீத கட்டுமானப்பணிகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த **12** ஆண்டுகளாக பல்வேறு துறைகளில் வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்ட்ர மாநிலம், கோலாப்பூரில் ஆயிரத்து **445** கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்துப் பேசிய அவர், தேசிய பாதுகாப்பு, கலாச்சார சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மேம்பாடு அடைந்துள்ளதாக கூறினார்.

நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க அரசு உறுதிபூண்டிருப்பாக கூறிய அவர், புனித மற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களை பேணி பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து வருவதாக கூறிய அவர், எல்லை பாதுகாப்பை வலுப்படுத்துவதன் மூலம் சட்டவிரோத ஊடுருவலை தடுக்க முடியும் என்று கூறினார்.

**Karveer** கோவில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதன் மூலம், பக்தர்களுக்கு தேவையான வசதிகள் அமைக்கப்படும் என்று திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பிரிக்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களின் கூட்டம் புதுதில்லியில் நாளை மறுநாள் தொடங்குகிறது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் கலந்துகொள்கின்றனர்.

உலகளாவிய பாதுகாப்பு சவால்கள் குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்படும்.

வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உறுப்பு நாடுகள் எதிர்கொள்ளும் தேசிய பாதுகாப்பு சவால்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தீவிரவாதத்துக்கு எதிராக அமைக்கப்பட்டுள்ள பிரிக்ஸ் குழு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

<<<<<<>>>>>>

தேர்தல் நடவடிக்கைகளை மேம்படுத்த உறுதிபூண்டிருப்பதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுடன் உரையாடிய அவர், ஜனநாயகத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

தேர்தல்கள் வெளிப்படைத் தன்மையுடனும், நேர்மையாகவும் நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மாநிலங்களில் நடத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் மூலம் குறைபாடுகள் அகற்றப்பட்டதாகவும், புதிய வாக்காளர்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் திரு திரு **Gyanesh Kumar** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இளநிலை மருத்துவப்படிப்புக்கான நீட் நுழைவு மறுதேர்வு நாளை நடைபெறுகிறது.

நாடு முழுவதும் உள்ள **551** நகரங்களிலும், வெளிநாடுகளில் உள்ள **14** நகரங்களிலும் நடைபெறும் இத்தேர்வை **22** லட்சத்து **79** ஆயிரம் மாணவர்கள் எழுதுகின்றனர்.

இந்த தேர்வை பாதுகாப்பாகவும், வெளிப்படைத் தன்மையுடனம் நடத்த அனைத்து ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது.

சிசிடிவி கேமரா மூலம் கண்காணிக்கப்படும் என்றும், ஆதார் அடிப்படையிலான சோதனைகள் நடத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

நீட் மறுதேர்வு நாளை பிற்பகல் **2** மணிக்கு தொடங்கி மாலை ஐந்தேகால் மணிவரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பணியில் இரண்டரை லட்சம் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியா - தென்கொரியா இடையேயான உறவுகளை மேம்படுத்த அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தென்கொரியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் **Yun Hojung**-யுடன் ஆலோசனை மேற்கொண்ட பின், வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், டிஜிட்டல் நிர்வாகம், மின்னணு நிர்வாகம், பொது நிர்வாகம், திறன் வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பது குறித்து விவாதிக்கப்பட்டாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவும், தென்கொரியாவும் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்து வரும் ஜனநாயக நாடுகள் என்று கூறிய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், டிஜிட்டல் சான்றிதழ்கள், பொதுமக்கள் குறைதீர்ப்பு உள்ளிட்டவைகளில் வெளிப்படைத் தன்மை குறித்த செயல்திட்டம் குறித்து எடுத்துரைத்தார்.

பொதுத்துறை நிர்வாகம் மற்றும் அரசின் செயல்பாடுகள் குறித்து இருநாடுகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்தியா - தென்கொரியா இடையே வெளிப்படைத்தன்மையான பொதுமக்களுக்கு உதவி அளிக்கும் வகையிலான நிர்வாகத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதித்ததாக திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் திட்டங்கள் தகுதியுடைய அனைத்து மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

கோவா மாநிலம் பனாஜியில், அம்மாநில பிஜேபி செயற்குழுவில் உரையாற்றிய அவர், கோவா மாநிலத்தில் உள்ள 40 தொகுதிகளிலும் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றிக்கு கட்சியினர் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்தில மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டம் முடிவடைந்துள்ளது.

கடந்த மே **22**-ஆம் தேதி தொடங்கிய இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு, **75** மாவட்டங்களில் உள்ள **17** மாநகராட்சிகள், **200** நகராட்சிகள், **545** பேரூராட்சிகள் உள்ளிட்டவையில் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Meenakshi Hooda** மற்றும் **Prachi** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **51** கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Meenakshi Hooda** — ஸ்பெயினின் **Laura Fernandez** -ஐ வென்றார்.

மகளிர் **57** கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Prachi** — பிரான்சின் **Amina Zidani** -ஐ வென்றார்.

----------------

ஆசிய இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் — வேலவன் செந்தில்குமார் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை **11-7, 11-9** என்ற செட் கணக்கில், மலேசியாவின் ஜீவா **Lee** இணையை வென்றது.

-------------

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் **219** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் இந்தியா சற்றுமுன்வரை **17** ஓவரில், விக்கெட் இழப்பின்றி **133** ரன் எடுத்துள்ளது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் விளையாடிய ஆப்கானிஸ்தான், **44** புள்ளி இரண்டு ஓவரில், **218** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் இன்றிரவு பத்தரை மணிக்கு நெதர்லாந்து — ஸ்வீடனை எதிர்கொள்கிறது.

நாளை அதிகாலை மணி ஒன்று முப்பதுக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஜெர்மனி — ஐவரிகோஸ்ட்டையும், காலை ஐந்தரை மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் **Equador - Curacao** அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<<<END>>>>>>**